**Source:** *Tamil Murasu*, p4
**Date:** 7 June 2026

# சிங்கப்பூரில் கரை ஒதுங்கிய திமிங்கிலம் அரிய வகைகளில் ஒன்று

சிங்கப்பூர் கடலோரத்தில் கடந்த ஆண்டு ஒதுங்கிய திமிங்கிலம் அரிய வகைத் திமிங்கிலம் என்று கண்டறியப்பட்டுள்ளது.

தஞ்சோங் பகார் கடற்கரையில் செப்டம்பர் 6ஆம் தேதி இறந்த நிலையில் ஒரு திமிங்கிலம் கரை ஒதுங்கியது. அது ஒமுரா திமிங்கிலம் என்று பல மாத ஆராய்ச்சிகளுக்குப் பிறகு அடையாளம் காணப்பட்டுள்ளது.

ஒமுரா திமிங்கிலம் அரிய வகைத் திமிங்கிலமாகப் பார்க்கப்படுகிறது. அது எளிதாக மனிதர்கள் கண்ணில் சிக்காது. அது தொடர்பான தகவல்களும் குறைவாகவே உள்ளன.

“ஒமுரா திமிங்கிலத்தின் உயிரியல், எண்ணிக்கை, சூழலியல் போன்ற தகவல்கள் குறைவாகவே உள்ளன. பெரும்பாலான தகவல்கள் இல்லை,” என்று சிங்கப்பூர்த் தேசியப் பல்கலைக்கழகத்தின் (என்யுஎஸ்) லீ கோங் சியான் தேசிய வரலாற்று அருங்காட்சியின் மூத்த துணைக் காப்பாளர் டாக்டர் மார்க்கஸ் சுவா தெரிவித்தார்.



கரை ஒதுங்கிய திமிங்கிலத்தின் மண்டை ஓடு. **படம்: என்யுஎஸ் லீ கோங் சியான் தேசிய வரலாற்று அருங்காட்சி**

“2003ஆம் ஆண்டுதான் ஒமுரா திமிங்கிலம் புதிய விலங்கினமாக அறிவியல் உலகில் அறிவிக்கப்பட்டது. அதனால் அனைத்துலக அளவில் போதுமான தகவல் இல்லை. இதன் காரணமாக ஒமுரா திமிங்கிலம் அழியும் ஆபத்தில் உள்ள விலங்கினமாகப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது,” என்று சனிக்கிழமை (ஜூன் 6) ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்சிடம் டாக்டர் மார்க்கஸ் சொன்னார்.

“உலகில் எத்தனை ஒமுரா திமிங்கிலம் உள்ளது என்பது தெரியாத காரணத்தால், அவை எப்படி ஓரிடம் விட்டு மற்றொரு இடத்திற்குச் செல்கின்றன என்பது குறித்து விரிவாகத் தெரியவில்லை. இருப்பினும் அவை வெப்பமான, ஆழமற்ற கடலோரப் பகுதிகளில் காணப்படுகின்றன,” என்று அவர் குறிப்பிட்டார்.

Source: Tamil Murasu © SPH Media Limited. Permission required for reproduction.